# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (01.02.2023 முதல் 05.02.2023 )

**அறிக்கைஎண் 009/2023** **தேதி.31.01.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 06°செ முதல் 9°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் மழை பெறப்படவில்லை.

**திருப்பூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 27.01.23 முதல் 3.0.01.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 32°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 18°செ முதல் 20°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 87 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 29 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9-12 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (27.01.2023 முதல் 30.01.2023) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 05.02.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/01 | 28/01 | 29/01 | 30/01 | தேதி | நாள்-1 01/02 | நாள்-2 02/02 | நாள்-3 03/02 | நாள்-4 04/02 | நாள்-5 05/02 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 3 | 10 | 2 | 0 |
| 31 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 30 | 30 | 30 | 29 | 29 |
| 19 | 19 | 18 | 20 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 21 | 20 | 20 |
| 6 | 3 | 4 | 6 | மேக மூட்டம் (ஆக்டர்) | 4 | 4 | 5 | 6 | 4 |
| 87 | 82 | 61 | 75 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 90 | 90 | 80 |
| 29 | 29 | 30 | 52 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 30 | 50 | 50 | 50 |
| 10 | 9 | 12 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 8 | 10 | 8 | 6 |
| 90 | 70 | 90 | 90 | காற்றுவீசும் திசை | 20 | 20 | 90 | 90 | 90 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (01.02.2023 முதல் 05.02.2023)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலான மேக மூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 30°செ ஆகவும்,

சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் **30** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு **6-10** கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பொங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| 01-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 02-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 03-02-2023 | 7 | 5 | 5 | 6 | 6 | 5 | 4 | 7 | 7 | 7 | 5 | 7 | 4 |
| 04-02-2023 | 0 | 1 | 1 | 0 | 1 | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 0 | 1 |
| 05-02-2023 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்குக் குளிர்ந்த வறண்ட வானிலையுடன், காற்றின் வேகம் **6 - 10** கி.மீ வரை மேற்கு மண்டலங்களில் எதிர்பார்க்கப்படுபிறது. ஒரிரு இடங்களில் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது.<br>வறண்ட வானிலை தொடர்வதால், மண் ஈரத்தினைப்பொறுத்து மாலையில் நீர் பாசனம் செய்யவேண்டும். பயிர்கழிவு மூடாக்கு இடுவதால் மண் ஈரத்தினைப் பாதுகாக்கலாம்.<br>அறுவடை முடிந்த பிறகு நிலத்தினை கொத்து அல்லது சட்டிக் கலப்பை கொண்டு உடனடியாக உழுவதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் கோடை கால மழையின் ஈரப்பத்ததை சேகரிக்கலாம். |
| நெல் | நடவு மற்றும் பால்பிடிக்கும் பருவம்<br>பருவம் | நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் நவரை பருவ நெல் நடவினை நீர் மறைய நீர்கட்டு முறையுடன் மேற்கொள்ளவும்.<br>சம்பா நெல் பயிரில் தற்போது நிலவும் வானிலையால் கதிர் நாவாய் பூச்சி வர வாய்ப்புள்ளது. எனவே தாக்குதல் தென்பட்டால் டைகுளோர்வாஸ் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு **2** மில்லி வீதம் தெளிக்கவும். |
| கரும்பு | நடவு | வறண்ட வானிலை நிலவுவதால் கரும்பில் இளங்குருத்து புழு வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி வயலை நன்கு ஈரமாக வைத்துக்கொள்வதன் மூலம் இந்த தாக்குதலை குறைக்கலாம். மேலும் பயிர் மூடாக்கு செய்வதன் மூலமும் இந்த |

| | | |
|---|---|---|
| | | தாக்குதல் குறைவதோடு மட்டும் அல்லாமல் நீர் தேவையையும் குறைக்கலாம். |

| | | |
|---|---|---|
| வாழை | | மேற்கு வேளாண் மண்டலத்தில் வறண்ட காற்றானது 6 – 12 கி.மீ வரை வீச வாயப்புள்ளதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு போதிய முட்டுகொடுக்கவேண்டும். |
| கொடி வகை காய்கறி | பூக்கும் பருவம் | பெண் பூக்களை அதிகரிக்க கொடி வகை காய்கறி பயிரில் எத்ரல் 100 பிபிஎம் அதாவது 10 லிட்டர் தண்ணீரில் 1மில்லி கலந்து 15 நாட்கள் இடைவெளியில் நான்கு அல்லது ஐந்து முறை நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் பட்டத்தில் தெளிக்கவும். |
| கால்நடைகள் | | தற்போது நிலவும் வானிலையால் கறவை மாடுகளில் மடிவீக்க நோய் பரவ வாய்ப்புள்ளது. எனவே ஒரு சதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு பால் கறப்பதற்கு முன்னும் பின்னும் மடியை சுத்தம் செய்யவும். |

**குறுஞ்செய்தி**

- வறண்ட வானிலையில் கரும்பில் இளங்குருத்து புழு தாக்குதலை குறைக்க அடிக்கடி தண்ணீர் பாய்ச்சி வயலை நன்கு ஈரமாக வைத்தும் பயிர் கழிவு மூடாக்கும் இட வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**